**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 – 2011–2012ஆம் நிதியாண்டிற்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2863 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6428 கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பள்ளிக் கல்வி (வ.செ 2 )த்துறை**

அரசாணை (நிலை) எண்.193 — நாள் 02.12.2011

திருவள்ளுவராண்டு 2042

கார்த்திகை 16

படிக்க:

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.41998/சி5/இ2, நாள் 7.7.2011.
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண். 14853/டி1 /2011, நாள் 27.5.2011 மற்றும் 29.7.2011.

----

**ஆணை:–**

பள்ளிக் கல்வி இயக்குநர் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் 2011 – 2012–ம் ஆண்டிற்கான "ஆண்டு வரைவுத் திட்டத்தின்கீழ்" அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8–ம் வகுப்புகளுக்கு, மாணவர்கள் ஆசிரியர் விகிதாச்சாரத்தின்படி, 1282 பட்டதாரி ஆசிரியர் கூடுதல் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு, பணியிடங்களை நிரப்பிட ஆணை வேண்டியுள்ளார்.

2. தொடக்கக் கல்வி இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி அனைவருக்கும் கல்வி திட்டத்தின் 2011 – 2012–ம் ஆண்டிற்கான ஆண்டு வரைவுத் திட்டத்தின்கீழ் தொடக்கக் கல்வித் துறையில் 6 முதல் 8–ம் வகுப்புகளுக்கு மாணவர்கள் ஆசிரியர் விகிதாச்சாரப்படி 1581 பட்டதாரி ஆசிரியர் கூடுதல் பணியிடங்கள் மற்றும் 3565 இடைநிலை ஆசிரியர் கூடுதல் பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு, பணியிடங்களை நிரப்பிட ஆணை வேண்டியுள்ளார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் பணியிடங்களுக்கான செலவினம் அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் கீழ் (மத்திய அரசு 65% மாநில அரசு 35 % என்ற அடிப்படையில்) மேற்கொள்ளப்படும்.

3. மேற்காணும் பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ், 2011–2012–ஆம் நிதியாண்டில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1282 பட்டதாரி ஆசிரியர்

பணியிடங்கள் மற்றும் தொடக்கக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளில் **6** முதல் **8**ம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய **1581** பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், **3565** இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், ஆக மொத்தம் **6428** கூடுதல் ஆசிரியர் பணியிடங்களை ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மாவட்டவாரியாக கூடுதல் ஆசிரியர் பணியிடங்களின் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**4.** பள்ளிக்கல்வித் துறையின் ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

2202 பொதுக்கல்வி – **02** இடைநிலைக்கல்வி – **109** – அரசு இடைநிலைப்பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AZ –அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்தல் – **01** சம்பளங்கள். **(த.தொ.கு 2202 02 109 AZ 0108)**

5. மேற்படி செலவினம் அனைவருக்கும் கல்வி திட்ட நிதியிலிருந்து திரும்ப பெறப்பட்டு கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படவேண்டும்:–

**0202** கல்வி, போட்டி, விளையாட்டுக்கள், கலையும் பண்பாடும் – **01** பொதுக்கல்வி – **102** – இடைநிலைக்கல்வி AK அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு தொகை வழங்குவதற்கான வரவினங்கள். **(த.தொ.கு 0202 01 102 AK** 0001)

**6.** தொடக்கக் கல்வித் துறையின் ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

2202, பொதுக்கல்வி – **01** தொடக்கக்கல்வி – **101** – அரசு தொடக்கப்பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AD – அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குதல் **01** சம்பளங்கள்.
**(த.தொ.கு 2202 01 101 AD 0001)**

**7.** மேற்படி செலவினம் அனைவருக்கும் கல்வி திட்ட நிதியிலிருந்தது திரும்பபெறப்பட்டு கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படவேண்டும்:–

**0202** கல்வி, போட்டி, விளையாட்டுக்கள், கலையும் பண்பாடும் – **01** பொதுக்கல்வி – **101** –தொடக்கக்கல்வி AA –ஏனைய வரவுகள்– **12** அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழான வரவுகள். **(த.தொ.கு 0202 01 101 AA** 1204)

8. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவினம் **'புது துணைப் பணித்திட்டமாக'** (New Instrument of Service) கருதப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணைகள் நிதி(வ.செ.தி.பொ–I)த் துறையில் வெளியிடப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் நிதியொதுக்கம் செய்யப்படும் வரை, மேலே ஒப்பளிப்பு

செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த உடனடி செலவிற்கு தேவையான நிதியினை நிர்ணயித்து எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் பெற்றிட ஏதுவாக தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதி(வ.செ.தி.பொ.I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், இச்செலவினத்தை 2011–12ம் ஆண்டிற்குரிய துணை மதிப்பீடுகளில் சேர்க்கும் பொருட்டு, உரிய விளக்கக் குறிப்பினை அரசின் நிதி (வரவு செலவு பொது–I)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறும் பள்ளிக்கல்வி மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.64029/மை.ம.ஆ.பி/2011, நாள் 2.12.2011–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1015 (ஆயிரத்து பதினைந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

**தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
மாநிலத் திட்டஇயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை – 6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு பொது I & II) துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் (வரவு–செலவு/எஸ்,)துறை சென்னை–9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை–9
பள்ளிக்கல்வித் துறை. அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்.**

## இணைப்பு –1

**(அரசாணை நிலை எண்.193, பள்ளிக் கல்வித் துறை, நாள் 02.12.2011)**

**பள்ளிக் கல்வித் துறையில் அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் மாவட்ட வாரியான மற்றும் பாடவாரியான விவரம்**

| வரிசை எண் | மாவட்டம் | அறிவியல் மற்றும் கணிதம் | சமூக அறிவியல் | மொழிப் பாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 2 | 2 | 2 | 6 |
| 2. | கோயம்புத்தூர் | 71 | 71 | 71 | 213 |
| 3. | தர்மபுரி | 24 | 24 | 23 | 71 |
| 4. | திண்டுக்கல் | 1 | – | – | 1 |
| 5. | ஈரோடு | 31 | 31 | 30 | 92 |
| 6. | காஞ்சிபுரம் | 18 | 18 | 18 | 54 |
| 7. | கரூர் | 1 | 1 | 1 | 3 |
| 8. | கிருட்டிணகிரி | 19 | 19 | 19 | 57 |
| 9. | மதுரை | 24 | 24 | 24 | 72 |
| 10. | நாகபட்டிணம் | 15 | 15 | 15 | 45 |
| 11. | நாமக்கல் | 5 | 5 | 4 | 14 |
| 12. | பெரம்பலூர் | 8 | 8 | 8 | 24 |
| 13. | புதுக்கோட்டை | 17 | 17 | 16 | 50 |
| 14. | சிவகங்கை | 11 | 11 | 11 | 33 |
| 15. | தேனி | 4 | 4 | 3 | 11 |
| 16. | திருச்சி | 7 | 7 | 7 | 21 |
| 17. | திருநெல்வேலி | 7 | 7 | 7 | 21 |
| 18. | திருவள்ளூர் | 23 | 23 | 23 | 69 |
| 19. | திருவாரூர் | 19 | 19 | 19 | 57 |
| 20. | திருவண்ணாமலை | 22 | 22 | 22 | 66 |
| 21. | தூத்துக்குடி | 7 | 7 | 7 | 21 |
| 22. | வேலூர் | 35 | 35 | 35 | 105 |
| 23. | விழுப்புரம் | 57 | 57 | 56 | 170 |
| 24. | விருதுநகர் | 2 | 2 | 2 | 6 |
| | **மொத்தம்** | **430** | **429** | **423** | **1282** |

## இணைப்பு –2

**(அரசாணை நிலை எண்.193, பள்ளிக் கல்வித் துறை, நாள் 02.12.2011)**

**தொடக்கக் கல்வித் துறையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களின் மாவட்ட வாரியான விவரம்**

| வரிசை எண் | மாவட்டம் | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 232 |
| 2. | கடலூர் | 164 |
| 3. | திண்டுக்கல் | 130 |
| 4. | ஈரோடு | 50 |
| 5. | காஞ்சிபுரம் | 99 |
| 6. | கன்னியாகுமரி | 39 |
| 7. | கரூர் | 37 |
| 8. | கிருட்டிணகிரி | 240 |
| 9. | மதுரை | 111 |
| 10. | நாகபட்டிணம் | 85 |
| 11. | நாமக்கல் | 77 |
| 12. | பெரம்பலூர் | 92 |
| 13. | புதுக்கோட்டை | 161 |
| 14. | இராமநாதபுரம் | 117 |
| 15. | சேலம் | 238 |
| 16. | சிவகங்கை | 52 |
| 17. | தேனி | 71 |
| 18. | திருச்சி | 98 |
| 19. | திருநெல்வேலி | 119 |
| 20. | திருவள்ளூர் | 86 |
| 21. | திருவண்ணாமலை | 219 |
| 22. | திருவாரூர் | 77 |
| 23. | தூத்துக்குடி | 44 |
| 24. | வேலூர் | 310 |
| 25. | விழுப்புரம் | 471 |
| 26. | விருதுநகர் | 146 |
| | **மொத்தம்** | **3565** |

## இணைப்பு –3

**(அரசாணை நிலை எண்.193, பள்ளிக் கல்வித் துறை, நாள் 02.12.2011)**

**தொடக்கக் கல்வித் துறையில் நடுநிலைப்பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் மாவட்ட வாரியான மற்றும் பாடவாரியான விவரம்**

| வரிசை எண் | மாவட்டம் | அறிவியல் மற்றும் கணிதம் | சமூக அறிவியல் | மொழிப் பாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 2 | 2 | 2 | 6 |
| 2. | கோயம்புத்தூர் | 90 | 90 | 90 | 270 |
| 3. | தர்மபுரி | 30 | 30 | 30 | 90 |
| 4. | திண்டுக்கல் | 1 | 1 | 1 | 3 |
| 5. | ஈரோடு | 39 | 39 | 39 | 117 |
| 6. | காஞ்சிபுரம் | 23 | 23 | 22 | 68 |
| 7. | கன்னியா குமரி | 6 | 6 | 6 | 18 |
| 8. | கரூர் | 2 | 1 | 1 | 4 |
| 9. | மதுரை | 31 | 31 | 30 | 92 |
| 10. | நாகபட்டிணம் | 19 | 19 | 19 | 57 |
| 11. | நாமக்கல் | 6 | 6 | 6 | 18 |
| 12. | பெரம்பலூர் | 11 | 11 | 10 | 32 |
| 13. | புதுக்கோட்டை | 21 | 21 | 21 | 63 |
| 14. | சிவகங்கை | 14 | 14 | 14 | 42 |
| 15. | தேனி | 4 | 4 | 4 | 12 |
| 16. | திருச்சி | 9 | 9 | 8 | 26 |
| 17. | திருநெல்வேலி | 8 | 8 | 8 | 24 |
| 18. | திருவள்ளூர் | 30 | 30 | 29 | 89 |
| 19. | திருவாரூர் | 25 | 25 | 25 | 75 |
| 20. | திருவண்ணாமலை | 29 | 29 | 29 | 87 |
| 21. | தூத்துக்குடி | 10 | 9 | 9 | 28 |
| 22. | வேலூர் | 45 | 45 | 45 | 135 |
| 23. | விழுப்புரம் | 72 | 72 | 72 | 216 |
| 24. | விருதுநகர் | 3 | 3 | 3 | 9 |
| | மொத்தம் | **530** | **528** | **523** | **1581** |

**தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.